www.padippakam.com


# வானவில்

VAANAVIL
ISSUE – 55 JULY 2015


இதழ் - 55 ஆடி 2015


## பாராளுமன்ற பொதுத் தேர்தல்:

# வலதுசாரி பிற்போக்கு சக்திகளை மக்கள் ஒன்றிணைந்து தோற்கடிக்க வேண்டும்!

நாட்டில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் 2015 ஓகஸ்ட் 17இல் நடைபெறவிருக்கிறது. இந்தத் தேர்தல் தற்போதைய பாராளுமன்றத்தின் ஆயுள்காலம் முடிவடைந்ததின் காரணமாக இயல்பாக நடைபெறும் ஒரு தேர்தல் அல்ல. முறைப்படி அப்படியான ஒரு தேர்தல் நடைபெறுவதற்கு இன்னமும் ஓராண்டு இருக்கிறது.

இவ்வருடம் ஜனவரி 08ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு ஓடி, வலதுசாரி பிற்போக்குக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க) உதவியுடன் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்ட பின்னர், நாட்டில் எழுந்த அசாதாரண ஜனநாயக விரோதச் சூழ்நிலையால்தான் தற்போதைய தேர்தல் நடைபெற வேண்டிய சூழல் உருவாகி இருக்கிறது.




ஏற்கெனவே ஆட்சியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு (ஐ.ம.சு.கூ) அரசாங்கம் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் இருக்கத்தக்கதாக, ஜனநாயத்துக்கு விரோதமாக வெறுமனே 47 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஐ.தே.கவை அரசாங்கம் அமைப்பதற்கு ஜனாதிபதி சிறிசேன அனுமதித்தார். இந்த ஜனநாயகப் படுகொலையை 'நல்லாட்சி' என்ற பெயரில் அரங்கேற்றி முடித்தனர்.

அந்த உண்மையை, அதாவது ரணில் விக்கிரமசிங்கவின் வலதுசாரி அரசாங்கம் ஆட்சியில் இருந்த குறுகிய காலத்தில் தனது மக்கள் விரோத, ஜனநாயக விரோதச் சுயரூபத்தைக் காட்டிவிட்டது. முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் குடும்பம் உட்பட, அந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள், கட்சி ஆதரவாளர்கள், அரச அதிகாரிகள் என எல்லோரையும் பழிவாங்கும் நடவடிக்கையை ரணில் அரசாங்கம் வகைதொகையில்லாமல் செய்தது. இலங்கையின் வரலாற்றிலோ அல்லது உலக வரலாற்றிலோ இவ்வளவு தொகையாகவும், வேகமாகவும் அரசியல் பழிவாங்கல்கள் நடைபெற்றது கிடையாது என்னும் அளவுக்கு இந்த நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

மறுபக்கத்தில், முன்னைய அரசாங்கம் ஆரம்பித்த வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டன. தகாத நபர் ஒருவரை மத்திய வங்கி ஆளுநராக நியமித்ததின் மூலம், திறைசேரியில் ஊழல்கள் மோசடிகள் நடைபெற வாய்ப்பு உருவாக்கிக் கொடுக்கப்பட்டது. பண்டாரநாயக்காவாலும், அவரது மனைவி சிறீமாவோவாலும் உருவாக்கப்பட்டு, கட்டிக்காக்கப்பட்டு வந்த, வெளிநாட்டு வல்லரசுகளுக்கு எதிரான அணிசேராக் கொள்கை கைவிடப்பட்டு, நாடு ஏகாதிபத்திய கொலனியாக மாறக்கூடிய வெளிநாட்டுக் கொள்கைக்கு அத்திபாரம் இடப்பட்டது. இலங்கைக்கு நெருக்கடியான நேரங்களில் உதவிய சீனா, ரஸ்யா போன்ற நாடுகளுடனான நீண்ட கால நட்புறவு கீழிறக்கம் செய்யப்பட்டது.

ஆனால் ஐ.தே.க அரசாங்கம் அமைத்தாலும், அந்தச் சிறுபான்மை அரசாங்கம் எந்த நேரமும் கவிழலாம் என்ற அச்சமும் அதற்கு இருந்தது. அந்த அரசாங்கத்தைக் கவிழ்ந்து விடாமல் காப்பாற்றுவதற்காக, தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியைக் கைப்பற்றி வைத்துக்கொண்டு, அதன் உறுப்பினர்கள் சிலரை நிர்ப்பந்தித்து

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..

நூறு சிந்தனை மலரட்டும்

படிப்பகம்

www.padippakam.com

# வாக்குறுதிகளும் ஆணைகளும்

மக்களிடையே இருந்து பொது நிர்வாகங்களிற்கு மக்களின் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் தேர்தல் என்கின்ற முறைமை 17ம் நூற்றாண்டிலிருந்து நடைமுறையிலிருந்து வருகின்றது. தேர்தலில் வெற்றி பெற்றால் மக்களுக்கு திறம்பட சேவையாற்றுவதாக கூறுவதை நம்பியே, மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்கின்றனர். ஆனால் அவ்வாறு சிறந்த சேவையை மக்களுக்கு வழங்கத் தவறினால் மக்களால் எதுவும் செய்ய முடியாது. அதாவது அடுத்த தேர்தலொன்று வரும்வரை மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை, அதே மக்களால் வாபஸ் பெறமுடியாது. ஆனால் அடுத்த தேர்தலில் மீண்டுமொருமுறை வேறு பிரதிநிதிகளை தெரிவு செய்யும் வாய்ப்பு வழங்கப்படும். அதனை மக்கள் சரியாக பயன்படுத்துகிறார்களா என்பதைப் பொறுத்தே மக்கள் அரசியல் ரீதியாக ஏதாவது கற்றுக் கொண்டிருக்கிறார்களா என்பது பற்றி கருத்துக் கூறமுடியும்.

இலங்கையைப் போன்றே உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள கட்சிகள், தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியிலமர்வதை மையமாக வைத்தே தமது செயற்திட்டங்களை வகுக்கின்றன. இந்த கட்சிகள் தேர்தல் காலத்தில் மாத்திரம் உயிர்பெற்று மக்கள் முன்னே வந்து வாக்கு கேட்பார்கள். பின்னர் தேர்தலில் வென்றவர்களும் தோற்றவர்களும், அடுத்த தேர்தல் வரும்வரை முடிந்தவரையில் மக்களிடமிருந்து அந்நியப்பட்டே இருப்பார்கள். ஆனால் தாராளமாக மாற்றுக் கட்சிக்காரர்களுடனும் தமக்குள்ளும் முட்டிமோதி, ஒருவரை ஒருவர் தாக்கிப்பேசி, ஏராளமான உட்பூசல்களுடன், பின்னர் அடுத்து வரும் தேர்தல் வேட்பாளர் நியமனத்திலும் இழுபறிகள் நிகழ்த்தி, அடுத்த தேர்தலில் வாக்குவேட்டைக்கு மக்கள் முன்னே மீண்டும் தோன்றுவார்கள்.

ஒரு கட்சியின் இருப்பு என்பதே தேர்தலில் வெற்றி பெறுவதிலேயே தங்கியிருக்கின்றது என்று கூறுமளவிற்கு தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. இதனால் ஒவ்வொரு தேர்தலும் முன்னைய தேர்தலைவிட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது மாதிரியான கற்பிதங்களை உருவாக்கி, வாக்குறுதிகளை வாரி வழங்கி, தேர்தலில் தத்தமது கட்சிகள் வெற்றிபெற அனைத்து வகையான பிரயத்தனங்களையும் கட்சியினர் எடுப்பார்கள்.

இலங்கையில் எதிர்வரும் ஓகஸ்ட் 17ந் திகதி பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. வழமை போலவே தமிழ் பேசும் மக்களை அறுதிப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கில் தமிழ் தேசியக் (அரசு – சிங்கள எதிர்ப்புக்) கோசங்களை முன்னிறுத்தியும், மூவின மக்கள் (தமிழர், முஸ்லீமகள், சிங்களவர்) வாழும் கிழக்கில் தத்தமினத்து வேட்பாளர்களை ஆதரிப்பதே ஒரேயொரு தேர்வாகவும், சிங்கள மொழி பேசும் இனத்தவரை பெரும்பான்மையாகக் கொண்ட தெற்கில் இருபெரும் கட்சிகளுக்கு இடையேயான பலப்பரீட்சையாகவும், தேர்தல் களை கட்டியுள்ளது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்பது வடக்கு, கிழக்கு பகுதித் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக மாத்திரமே உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு. இதில் தற்போது நாலு அமைப்புகள் அங்கம் வகிக்கின்றன. இதில் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று அமைப்புகளும் முன்னர் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டவை. தமிழரசுக்கட்சிக்கு தமிழ் மக்களுக்கு தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளிவீசி, ஆணைகள் கேட்பதில் 66 வருடகால அனுபவம் உள்ளது. இதனால் தமிழரசுக்கட்சியின் சாயம் பூசினால்தான் தேர்தலில் வெற்றி பெறலாம் என்ற நியதி தோன்றியுள்ளது. இதனை மனதில் கொண்டே, இந்த முன்னாள் ஆயுதக்குழுக்கள் த.தே.கூவில் தமிழரசுக்கட்சியின் வாலில் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

தேர்தல் வாக்குறுதிகளை மக்கள் நம்புகிறார்களோ என்னவோ என்பதை சரியாக கணிக்க முடியாவிடினும், இதுவரைக்கும் தப்பாது மக்கள் ஆணைகளை வழங்கியுள்ளார்கள். 'தேர்தலில் வெற்றி பெற்றால் இனப்பிரச்சனைக்கு (தமிழ் மக்களின் பிரச்சனைக்கு) தீர்வு காணுவோம் எமக்கு ஆணை தாருங்கள்' என இவர்கள் இதுவரை நடந்த அனைத்து தேர்தல்களிலும் சொல்லி வந்ததையே இப்போதும் கூறியிருக்கிறார்கள். இவர்களுக்கு மக்களின் ஏனைய அத்தியாவசிய தேவைகள், பற்றாக்குறைகள் ஒரு பொருட்டாகவே தெரிவதில்லை. வேலைவாய்ப்பு எதுவுமற்ற தமிழ் இளைஞர்களில் ஏறத்தாள 90 வீதமானோர், உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் வெளிநாடு செல்ல வேண்டுமென்ற கனவில் இருப்பது இவர்களுக்கு ஒரு பிரச்சனையாக தெரிவதேயில்லை.

புலிகளின் பலம் வெறும் ஆயுதங்களால் மாத்திரமே கட்டியமைக்கப்பட்டிருந்தது. இலங்கை இராணுவத்திற்கு எதிராக போராடுவதற்காகவே ஆயுதங்களை தூக்கினோமென புலிகள் கூறிக்கொண்டாலும், புலிகளின் அரசியலை நிராகரிப்பவர்களை நிர்மூலமாக்குவதற்கும், புலிகளுக்கு ஆயுதங்கள் அத்தியாவசியமாக இருந்தன. இதனால் அரசுக்கு மாத்திரமன்றி, இலங்கையில் ஜனநாயகத்தை நேசித்த சகல இனத்தவர்களுக்கும் புலிகள் இயக்கத்தை இல்லாதொழிக்க வேண்டுமென்பதே தவிர்க்க முடியாத தேர்வாக இருந்தது. புலிகள் எப்படி முள்ளிவாய்க்காலில் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டார்களோ அது போலவே, தமிழ் தேசியக்கூட்டமைப்பும் அரசியல் ரீதியாக (தேர்தலில்) தோற்கடிக்கப்பட வேண்டும். இது நடக்காத வரை தமிழர் வாழ்வில் முன்னேற்றம் எதுவும் ஏற்படப்போவதில்லை. *

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.


படிப்பகம்

www.padippakam.com



# வடக்கு முஸ்லிம்கள் மீள் குடியேறுவதை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க்கின்றனரா?

**வ**டக்கு முஸ்லிம் மக்கள் புலிகளால் 1990 ஒக்ரோபர் 30ஆம் திகதி அவர்களது பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து இனச்சுத்திகரிப்பு நோக்குடன் துரத்தியடிக்கப்பட்டு ஏறத்தாழ 25 வருடங்கள் ஆகப்போகின்றது. ஆனால் அவர்களது கண்ணீர்க் கதை இன்னமும் முற்றுப்பெறவில்லை.

1995இல் சந்திரிகா அரசாங்கம் புலிகளை யாழ் குடாநாட்டிலிருந்து விரட்டிய பின்னர், அவர்களது பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என அவர்களும், அவர்களது நலனில் அக்கறையுள்ள பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் சந்திரிக்காவும் சரி, அவரது அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த முஸ்லிம் அரசியல்வாதிகளும் சரி, வடக்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் சம்பந்தமாக எதனையும் பெரிதாகச் செய்யவில்லை.

2005இல் மகிந்த ஜனாதிபதியானதும் அவர் எதாவது செய்வார் என்ற எதிர்பார்ப்பு அந்த மக்களிடம் மீண்டும் துளிர்விட்டது. அவரும் அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்த முஸ்லிம் அமைச்சர்களும் கூட எதனையும் செய்யவில்லை. 2009இல் புலிகள் முற்றுமுழுதாக இலங்கையிலிருந்து ஒழித்துக்கட்டப்பட்ட பின்னராவது வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுமா என எதிர்பார்த்திருந்த வேளையில், தென்னிலங்கையில் பாரம்பரியமாக வாழ்ந்த முஸ்லிம் மக்களுக்கே சிங்களப் பேரினவாத சக்திகள் சிலரால் புதிய பிரச்சினைகள் உருவாகியதேயொழிய, வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினை கிணற்றுக்குள் போட்ட கல்லாகிப் போனது.

இந்தப் பிரச்சினையில் எவ்வித அக்கறையும் காட்டாத இன்னொரு தரப்பும் இருக்கின்றது. அவர்கள் வேறு யாருமல்ல, முஸ்லிம் மக்களை நோக்கி இடையிடையே ‘நேசக்கரம்’ நீட்டுகிற தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்தான் அவர்கள். இந்தப் பிரச்சினையில் புலிகள் இருந்த காலத்தில் மட்டுமின்றி, அதன் பின்னரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கபடத்தனமான மௌனம் காத்து வருவதைக் காண முடிகிறது. புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூட, சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக இருவேறு சந்தர்ப்பங்களில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை புலிகள் படுகொலை செய்ததும், இலங்கையின் வட பகுதியிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியதும் ‘துன்பியல் சம்பவங்கள்’ எனக் கூறவேண்டி வந்தது.

ஆனால் இடையிடையே முஸ்லிம் மக்களில் அக்கறையுள்ளவர்கள் போல அவர்களை நோக்கிப் போலியாக நேசக்கரம் நீட்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, வடக்கிலிருந்து முஸ்லிம்கள் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டது சம்பந்தமாக இன்று வரை ஒரு வரியில் கூட வருத்தம் தெரிவிக்கவில்லை. அதுமட்டுமலலாமல், தமிழ் மக்களின் மீள் குடியேற்றம் பற்றி வாய் ஓயாது கதைப்பவர்கள், முஸ்லிம் மக்களது மீள் குடியேற்றம் சம்பந்தமாக ஒருமுறை தன்னும் வாய் திறந்தது கிடையாது.

இந்த நிலைமையில் யூன் 12ஆம் திகதி யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வடக்கு முஸ்லிம்கள் சம்பந்தமான ஒரு கூட்டத்தில் பங்குபற்றிய, தகவல் வழிகாட்டல் மத்திய நிலைய உப தலைவர் எம்.நிபாவஹீர், வடக்கில் முஸ்லிம் மக்களை மீள் குடியேற்றம் செய்வதைச் சில தரப்பினர் மறைமுகமாக எதிர்த்து வருகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்ட இந்தச் ‘சில தரப்பினர்’ எனப்படுவோர் யார்?

## வாஹிர்

இன்றைய நிலையில் இரு பகுதியினரைத் தவிர வேறு எவரும் வடக்கு முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றத்தை எதிர்ப்பார்கள் என எதிர்பார்ப்பதற்கில்லை. அந்த இரு தரப்பினரில் ஒரு பகுதியினர் புலிகள். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்வதற்கு வாய்ப்பு இல்லை. ஏனெனில் நடைமுறை யதார்த்தத்தில் அவர்களது பிரசன்னம் வடக்கிலோ அல்லது இலங்கையிலோ இல்லை. எதிர்க்கக்கூடிய இன்னொரு தரப்பினர் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பினர். ஏனெனில் அவர்களிடம் சிங்கள இன – பௌத்த மத எதிர்ப்பு மட்டுமின்றி, முஸ்லிம்களுக்கு எதிரான மனோ நிலையும் நீண்டகாலமாக இருந்து வருவது இரகசியமானதல்ல. அதனால்தான் நீண்டகாலமாக



படிப்பகம்

www.padippakam.com

தமிழரசுக் கட்சியை ஆதரித்து வந்த வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்கள் பின்னர் தமக்கென தனியான அரசியல் கட்சிகளை உருவாக்க நேர்ந்தது.

எனவே நிபாவறீர் பெயர் குறிப்பிட விரும்பாமல் சில தரப்பினர் எனக் குறிப்பிட்டது தமிழ் தேசியக் கூட்டமைப்பினரையே என்ற ஐயப்பாடு பலரிடமும் உருவாகியுள்ளது. தாம் அப்படிப்பட்டவர்கள் இல்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மறுப்பார்களாயின், அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் புலிகள் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியதற்கு உத்தியோகபூர்வமாக வருத்தம் தெரிவிப்பதுடன், தமது வேலைத்திட்டத்தில் முன்னுரிமைகளில் ஒன்றாக வடக்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட வேண்டும்.

கூட்டமைப்பினர் இதைச் செய்வார்களா? *

## நாளை நமதே

கண்களில் நீர் தளும்ப இதைச் சொல்கிறேன்

இருபதாம் நூற்றாண்டு செத்துவிட்டது

சிந்தனையாளர் சிறு குழுக்களாயினர்

கொள்கைகளை

கோஷ வெறியேற்றி

ஊர்வலம் வந்தனர் தலைவர்கள்

மனச் சீரழிவே கலையாகத் துவங்கிற்று

மெல்லக் கொல்லும் நஞ்சை

உணவாய்ப் புசித்தனர்

எளிய மக்கள்

புரட்சி போராட்டம்

எனும் வார்த்தைகளினின்று

அந்நியமாயினர்

இருப்பை உணராது

இறப்புக்காய்த் தவம் புரிகின்றனர்

என் ஸக மனிதர்கள்

இந்தத் துக்கத்திலும்

என் நம்பிக்கை

நாளை நமதே

**- ஆத்மாநாம்**

# சுயநிர்ணய உரிமை என்றால் என்ன?


## -லெனின்

**சு**யநிர்ணயம் என்று அறியப்படும் ஒன்றைக் குறித்து மார்க்சிய முறையில் ஆராய முயலும் போது இயல்பாகவே எழும் முதல் கேள்வி இதுவாகும். அந்தச் சொல்லை எந்தப் பொருளில் புரிந்து கொள்வது? சட்டத்தின் எல்லா வகைப்பட்ட "பொதுவான கருத்துருக்களில்" இருந்தும் பெறப்பட்ட சட்ட வரையறுப்புகளில் இந்த விடையைத் தேடுவதா? அல்லது தேசிய இனங்கள் பற்றிய வரலாற்று, பொருளாதார ஆய்வில் அதைத் தேடுவதா?

....ருஸ்யாவில் தேசிய இன இயக்கங்கள் தோன்றியிருப்பது இதுதான் முதல் தடவையல்ல. இவை இந்த நாட்டுக்கு மட்டுமே பிரத்தியேகமானவையுமல்ல.

உலகம் முழுவதும் நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து முதலாளித்துவம் அடையும் இறுதி வெற்றியின் காலப் பகுதி தேசிய இன இயக்கங்களுடன் இணைந்துள்ளது. பண்ட உற்பத்தி முழு வெற்றியடைவதற்கு, முதலாளி வர்க்கம் உள்நாட்டுச் சந்தையைக் கைப்பற்ற வேண்டும். ஒரே மொழி பேசும் மக்களைக் கொண்ட, அரசியல் ரீதியில் ஒற்றுமைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் அதற்கு வேண்டும். அந்த மொழியின் வளர்ச்சிக்கும் அதன் இலக்கியம் உருப்பெற்று விளங்கவும் குறுக்கே நிற்கும் தடைகள் யாவும் அகற்றப்பட வேண்டும் - இங்குதான் இந்த இயக்கங்களின் பொருளாதார அடித்தளம் இருக்கின்றது. மனித இடைத் தொடர்புகளுக்கு மிக முக்கியமான சாதனம் மொழியாகும்.

நவீன முதலாளித்துவத்துக்குச் சரியான வீதத்தில் மெய்யாகவே தடையற்ற விரிவான வாணிபத்துக்கும், பல்வேறு வர்க்கங்களைச் சார்ந்த மக்கள் சுதந்திரமான, விரிவான பிரிவுகளாக அமைவதற்கும், இறுதியாகச் சந்தையுடன் ஒவ்வொரு பெரிய, சிறிய உரிமையாளரும், விற்போரும் வாங்குவோரும் பரஸ்பரம் நெருக்கமான தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும் மிக முக்கியமான நிபந்தனைகளில் மொழியின் ஒற்றுமையும் தங்குதடையற்ற வளர்ச்சியும் அடங்கும்.



எனவே, ஒவ்வொரு தேசிய இன இயக்கத்தின் போக்கும் **தேசிய இன அரசுகளை** நிறுவும் திசையிலானதாகும். அவ்வரசுகளின் கீழ் நவீன முதலாளித்துவத்தின் இந்தத் தேவைகள் நன்றாகப் பூர்த்தி செய்யப்படும். மிகவும் தீர்க்கமான பொருளாதாரக் காரணிகள் இந்த இலட்சியத்தை நோக்கி இட்டுச் செல்கின்றன. எனவே, மேற்கு ஐரோப்பா முழுவதற்கும், ஏன் நாகரிக உலகம் முழுவதற்குமே முதலாளித்துவ காலப் பகுதியில் தேசிய இன அரசு **மாதிரிப் படிவமானது**, சகஜமானது.

இதன் விளைவாக, சட்ட வரையறைகளை வைத்துக் கொண்டு ஜாலவித்தை செய்வதன் மூலமோ, சூக்குமமான இலக்கணங்களைப் "புனைவது" மூலமோ அன்றி தேசிய இன இயக்கங்களின் வரலாற்று, பொருளாதார நிலைமைகளை ஆராய்வதன் வாயிலாக தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்பதன் பொருளை நாம் புரிந்து கொள்ள விரும்பும் பட்சத்தில், இந்தத் தேசிய இனங்கள் அந்நிய தேசிய இன அமைப்புகளிலிருந்து அரசியல் ரீதியில் பிரிந்து, சுதந்திரமான தேசிய இன அரசாக உருப்பெறுவதே தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தின் பொருள் என்ற முடிவுக்குத் தவிர்க்க முடியாத வகையில் வந்து சேருவோம். *



படிப்பகம்

www.padippakam.com

# சுதந்திரக் கட்சியின் உள் முரண்பாடும், ஆடு நனைகிறது என்று அழுகின்ற ஓநாய்களும்!




- அரசியல் நிருபர்

**சி**றீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள் முரண்பாடு ஏற்பட்டிருப்பது இப்பொழுது ஒரு இரகசியமான விடயமல்ல. அதைத் தீர்ப்பதற்கான முயற்சிகளிலும் அக்கட்சியின் நலன் விரும்பிகள் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் இரகசியமல்ல. அது அவர்கள் உட்கட்சி விவகாரம் என்றபடியால், ஏனைய கட்சியினர் அது பற்றி பெரிதாக ஏதும் அலட்டிக் கொள்வதில்லை.

ஆனால், வேண்டாத விருந்தாளி ஒருவர், அதுவும் அந்தக் கட்சியை சர்வசதா காலமும் எதிர்த்து வந்த கூட்டத்தின் பிரதிநிதி ஒருவர், அந்தக் கட்சிக்குப் புத்திமதி சொல்லக் கிளம்பி இருக்கிறார். அவர் வேறு யாருமல்ல, தமிழர்களின் இன்றைய 'தானைத் தலைவரும்', உலகின் 'மிகச் சிறந்த இராஜதந்திரியும்', 'அரசியல் சாணக்கியருமான', தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் (அவரது கீர்த்திக்கான அடைமொழிகள் யாவும் தமிழ் ஊடகங்களால் காலத்துக்கு காலம் சூட்டப்பட்டவையாகும்).

அவரது 'ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதை'யைப் பார்ப்பதற்கு முன்னர், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்றைச் சுருக்கமாகப் பார்த்து விடுவோம்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி 1951ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து வந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவினால் உருவாக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால் அக்கட்சியை முதன்முதலாக உருவாக்குவதற்காக இணைந்து பணியாற்றியவர்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தந்தையார் டி.ஏ.ராஜபக்சவும் ஒருவர்.

பின்னர் சிறீமாவோவின் ஆட்சிக்காலத்தில் மகிந்த ராஜபக்சவின் மூத்த சகோதரர் ஜோர்ச் ராஜபக்ச சுதந்திரக் கட்சியில் சிறீமாவோவின் நம்பிக்கைக்குரிய தலைவர்களில் ஒருவராகவும், சிரேஸ்ட அமைச்சராகவும் பணி புரிந்தார். மகிந்த ராஜபக்ச 1970ஆம் ஆண்டு இலங்கையிலேயே மிகக் குறைந்த வயதில் நாடாளுமன்றத்துக்கு தெரிவான ஒருவராவார்.

ஐ.தே.கவை விட்டு பண்டாரநாயக்க வெளியேறி வந்ததிற்குக் காரணம், அக்கட்சி பின்பற்றிய ஏகாதிபத்திய சார்பு, தேச விரோதக் கொள்கைகளே. அதன் காரணமாகவே மக்களின் ஆதரவைப் பெற்று மிகக் குறுகிய காலத்தில், 1956இல் சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றி பண்டாரநாயக்க தலைமையில் அரசு அமைத்தது. பண்டாரநாயக்க தனது ஏகாதிபத்திய விரோத கொள்கைகளுக்கு இணங்கவும், மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்று முகமாகவும், பல தீவிரமான ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன் காரணமாகவே பிற்போக்கு சக்திகள் அவரை 1959 செப்ரெம்பரில் படுகொலை செய்தன.

அவரது மரணத்தின் பின்னர், அவரது மனைவி சிறீமாவோ கட்சியின் தலைவியாகவும், நாட்டின் பிரதமராகவும் மக்கள் செல்வாக்குடன் பல தடவைகள் பதவிகள் வகித்தார். அவரும் தனது கணவரின் ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளையே தீவிரமாகப் பின்பற்றினார்.

அவருக்குப் பின்னர் அவர்களது குடும்பத்தில் இருந்து தலைமையை ஏற்க ஆளில்லாதபடியால் (மகன் அனுர ஐ.தே.கவில் சங்கமமாகியிருந்தார்), சுதந்திரக் கட்சியை விட்டுச் சென்று தனது கணவருடன் 'சிறீலங்கா மக்கள் கட்சி' என்ற பெயரில் ஒரு கட்சியை நடாத்தி வந்த தனது கனிஸ்ட புத்திரி சந்திரிகவை திரும்பவும் கட்சிக்குக் கொண்டு வந்து கட்சியின் தலைவியாகவும், நாட்டின் தலைவியாகவும் தலைமைத்துவம் வகிப்பதற்கு தாயார் சிறீமாவோ வழிவகுத்தார். (சந்திரிகவின் கணவர் விஜேகுமாரதுங்க முன்னதாக ஜே.வி.பி. கொலைகாரர்களால் கொல்லப்பட்டிருந்தார்)

சந்திரிகாவின் 11 வருட ஆட்சிக்காலம் தனது தந்தை பண்டாரநாயக்கவினதும், தாயார் சிறீமாவோவினதும் ஆட்சிக் காலத்தை விட வித்தியாசமானது. அவர் தமது பெற்றோர் பின்பற்றிய தீவிரமான ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, ஏகாதிபத்திய சார்பு மேற்குலகிற்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பு கிழக்குலகிற்கும் இடையே ஊசலாடுபவராக, சமரசம் செய்பவராக இருந்தார். அதன் காரணமாகவே அவரால் பாசிசவாதப் புலிகளுக்கு எதிரான போரை வெற்றிகரமாக முன்கொண்டு செல்ல முடியமலும் இருந்தது. அதுமாத்திரமல்லாமல், அவரது இந்த ஊசலாடும் கொள்கை காரணமாகவே, மேற்குலக சக்திகள் புலிகளுக்குச் சார்பான நோர்வேயின் எரிக் சொல்கேய்ம் போன்றவர்களை சமாதான தூதுவராக நியமித்து, அவர் மூலம் இலங்கை அரசையும் புலிகளையும் சம நிலையில் வைத்துப் பேணவும் முடிந்தது.

சந்திரிகாவின் இந்த நிலைப்பாட்டுக்கு அவரது வெளிநாட்டு அமைச்சராகப் பதவி வகித்த — பின்னர் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட — மேற்கத்தைய சார்பான லக்ஸ்மன் கதிர்காமரும் ஒரு காரணம்.



படிப்பகம்

www.padippakam.com

அதனால்தான் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் அவருக்கு தீராத தலைவலி கொடுத்து வந்த மேற்கத்தைய வல்லாதிக்க சக்திகள், அதுபோல சந்திரிகாவுக்கு எவ்வித நெருக்கடிகளையும் கொடுக்கவில்லை. அதுமாத்திரமில்லாமல், சந்திரிகா அரசின் வேண்டுகோளை ஏற்று பல மேற்கு நாடுகள் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் இட்டுத் தடையும் செய்தன. மறுபக்கத்தில், தமது நாடுகளில் புலிகளின் செயற்பாடுகளைக் கண்டும் காணாமலும் இருந்தன.

(இதைத்தான் 'தொட்டிலையும் ஆட்டி, பிள்ளையையும் கிள்ளுவது' என்ற இராஜதந்திரம் எனச் சொல்வார்கள் போலும்)

மறுபக்கத்தில், தமது முன்னைய தலைவர்கள் யாரும் பின்பற்றாத வகையில், தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தனும் சந்திரிகவுடன் மிகவும் அந்நியோன்யமான உறவுகளை அவரது ஆட்சிக் காலத்தின் போது கொண்டிருந்தார். (பின்னர் புலிகளின் தந்திரோபாயம் காரணமாக அந்த உறவைச் சம்பந்தன் முறித்துக் கொள்ள வேண்டி வந்தது. இப்பொழுது புலிகள் இல்லாதபடியால், மீண்டும் சம்பந்தன் – சந்திரிக தேன்நிலவு ஆரம்பமாகியுள்ளது) அந்த உறவு தமிழ் மக்களுக்கு ஏதாவது சிறு உரிமைகளைத் தன்னும் பெற்றுக் கொடுப்பதற்காக அல்ல. தனிப்பட்ட முறையில் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காவே. (இதுபற்றி சந்திரிகவே தனிப்பட்ட முறையில் தனது நெருங்கிய சகாக்களிடம் ஒரு சமயத்தில் புலம்பியதாகக் கதை உண்டு)

சந்திரிகாவுக்குப் பின்னர் மகிந்த சுதந்திரக் கட்சியின் தலைவராகவும், நாட்டின் ஜனாதிபதியாகவும் பதவி ஏற்றார். அவரது தலைமைத்துவக் காலத்தில் அவர் புலிகளின் வழமையான தந்திரங்களுக்கு இடம் கொடுக்காமல், அவர்களை முற்றுமுழுதாகத் துவம்சம் செய்தார். அத்துடன், பண்டாரநாயக்கவும் அவரது மனைவி சிறீமாவோவும் பின்பற்றியது போல தீவிரமான ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளையும் பின்பற்றினார். (இதை அவர் முற்றுமுழுதான மன விருப்பத்தின் பேரில் செய்தாரா அல்லது மேற்கு வல்லாதிக்க சக்திகள் கொடுத்த நெருக்கடி காரணமாக அந்த நிலைப்பாட்டை எடுத்தாரா என்பது ஆராய்வுக்குரியது) அதுவே அவரது ஆட்சியை மேற்கத்தைய சக்திகள் தீவிரமாக எதிர்க்கக் காரணமாகியது.

அதனாலேயே, உள்நாட்டு — வெளிநாட்டுச் சக்திகள் ஒன்றிணைந்து இவ்வருடம் ஜனவரி 8ஆம் திகதி ஒரு ஆட்சி மாற்றத்தைச் செய்ய வழிவகுத்தது. இந்த ஆட்சி மாற்றத்தில் தமிழ் – முஸ்லிம் பிற்போக்கு சக்திகளுக்கும் ஒரு பங்கு இருந்தது. எப்பொழுதுமே சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளை கடுமையாக எதிர்த்து வரும் தமிழ் தலைமைகளின் வழி வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இப்பொழுது முன்பு அவர்களுக்குக் கசப்பாக இருந்த சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதியாக இருக்கும் – ஆனால் யதார்த்தத்தில் ஐ.தே.க. அரசாக உள்ள – அரசை ஆதரிக்கின்றது. இதற்கு முன்னர் சுதந்திர இலங்கையில் தமிழர்களின் முதல் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம், வே.பிரபாகரன் ஈறாக எவருமே சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளை ஆதரித்தது கிடையாது. தமிழ் தலைமைகளின் தொடர்ச்சியான ஏகாதிபத்திய ஆதரவுப் போக்கே அதற்குக் காரணம்.

இப்பொழுது சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடு தோன்றியுள்ளதற்குக் காரணம், அதன் தற்போதைய தலைவராக இருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அவரை வழிநடாத்தும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகவும், சுதந்திரக் கட்சியின் பாரம்பரியமான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளைக் கைவிட்டதும், அதன் முன்னைய தலைமைகளால் ஒருபோதும் செய்ய நினைக்காத வகையில் அதன் பரம வைரியான பிற்போக்கு ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்ததுமாகும். அதன் காரணமாகவே, சுதந்திரக் கட்சியின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளைக் காலம் காலமாக ஆதரித்து வந்த அதன் ஆயிரக்கணக்கான அங்கத்தவர்களும், அக்கட்சியை ஆதரிக்கும் இலட்சக்கணக்கான பொதுமக்களும் கட்சியின் கொள்கைகளை உயர்த்திப் பிடிக்கும் மகிந்த ராஜபக்சவின் பின்னால் அணிதிரண்டு நிற்கின்றனர்.

இத்தகைய ஒரு நிலையில்தான், அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தன், "சிறீலங்கா சுதந்திரக் கட்சி இலங்கையில் உள்ள மிதவாதமான கட்சி எனினும் இதனைக் கைப்பற்றுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். இதில் தொங்கிக் கொண்டு சிலர் இருக்கின்றனர். பிழையானவர்களின் கைகளில் சுதந்திரக் கட்சி சென்றுவிடக்கூடாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுதந்திரக் கட்சி முன்கொண்டு செல்லப்பட வேண்டும்" எனக் கூறி அங்கலாய்த்துள்ளார். ('தினகரன்' நாளேட்டுச் செய்தி)



காலம் காலமாக பண்டாரநாயக்க, அவர் மனைவி சிறிமாவோ, மகிந்த ராஜபக்ச என முன்னைய சுதந்திரக் கட்சித் தலைமைகளை எல்லாம் கர்ணகடூரமாக எதிர்த்து, அவர்களை எல்லாம் தமிழர்களின் பரம விரோதிகளாகவும், ஐ.தே.கவே தமிழர்களின் நண்பன் எனவும் காட்டி வந்த தமிழ்த் தலைமை, இப்பொழுது சம்பந்தனின் வாயால் மைத்திரியின் தலைமைக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கியுள்ளதுடன், சந்திரிகவுடனும் கூடிக்குலாவ ஆரம்பித்துள்ளது எனின், அவர்கள் இருவரும் சுதந்திரக் கட்சியை இன்னொரு ஐ.தே.கவாக மாற்ற முயல்கின்றனர் என்பதே காரணம். எனவே, உண்மையான சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும், தேசபக்தி உள்ள மக்களும், சுதந்திரக் கட்சியின் எந்தப் பிரிவின் பின்னால் அணிதிரள வேண்டும் என்பதற்கு, சம்பந்தனின் உரை ஒரு குறிகாட்டியாக இருக்கின்றது.

"எதிரி எதை ஆதரிக்கிறானோ அதை நாம் எதிர்க்க வேண்டும். எதிரி எதை எதிர்க்கிறானோ அதை நாம் ஆதரிக்க வேண்டும்"

–மாஓ


பாரிலுள்ள வர்க்கெலாம்
 படுபயன் பொதுவுமாய்
ஏர்மலிந் திடங்களெங்கு
 மின்பமே பயந்துநல்
வேரிசாந்த மூடுபோகி
 மேவியாடல் பாடலோடும்
வாரமாதர் போன்ற மாட
 வூர்கடோறு மாடெலாம்.

—சமய திவார வாமன முனிவர்


படிப்பகம்

www.padippakam.com

# வாழையடி வாழையாக...



உலகில் ஒரு நாடு பாக்கியில்லாமல் எல்லா நாடுகளிலும் கிடைக்கும் பழம் என்றால் அது வாழைப்பழம்தான். அதுமாத்திரமின்றி, இருக்கின்ற பழங்களிலே சாமானியனும் வாங்கிப் புசிக்கக்கூடிய மலிவான பழமும் வாழைப்பழம்தான்.

அதேநேரத்தில் இந்த மலிவான வாழைப்பழத்தில் விற்றமின் ஏ, விற்றமின் பி6, விற்றமின் சி, மக்னீசியம், பொற்றாசியம், இரும்புச்சத்து போன்ற பல்வேறு சத்துப் பொருட்கள் அடங்கியிருப்பதால், அது வாய்க்கு ருசியாக மட்டுமின்றி பல நோய்களுக்கு நிவாரணியாகவும் திகழ்கிறது. உஸ்ண வலய நாடுகளில் உணவு உட்கொண்ட பின்னர், அதன் துரித செரிமானத்துக்காக ஒரு வாழைப்பழம் உண்பது ஒரு வழமையாக இருந்து வருகிறது. அதற்காக இலங்கை, இந்திய நாடுகளில் சந்திக்குச் சந்தி 'வாழைப்பழக் கடை' இருப்பதைக் காண முடியும்.

வாழையின் பழம் மட்டுமல்லாது, அதன் எல்லாப் பாகங்களுமே பயன்படக்கூடியன. வாழையின் நடுவிலுள்ள தண்டின் சாறு சிறுநீரகக் கற்களை நீக்குவதுடன், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் என்பனவற்றின் செயற்பாட்டையும் அதிகரிக்கும் தன்மை வாய்ந்தது. வாழைப்பூ நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மிகச் சிறந்த உணவாகும்.

நம்மில் பலர் வாழை இலையில் சாப்பிடுவதற்கு மிகவும் பிரியப்படுவதுண்டு. அப்படிச் சாப்பிடுவதைச் சிலர் தமிழர்களின் பண்பாடு எனக் கருதுகின்றனர். இன்னும் சிலர் விரத நாட்களில் அப்படிச் சாப்பிடுவது புண்ணியம் என்று கருதுகின்றனர். எப்படிக் கருதிச் சாப்பிட்டாலும், அந்த இலையில் சாப்பிடுவது மருத்துவ ரீதியில் உடலுக்கு ஆரோக்கியமானது என்பதுதான் அதன் அடிப்படை உண்மை. அதுவும் சுடு பதார்த்தங்களை வாழை இலையில் போட்டுச் சாப்பிடும் போது, இலையின் மருத்துவத் தன்மையை அந்த உணவு சுவீகரித்து எமக்கு வழங்குகிறது என்ற உண்மை ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், எம்மைப் போன்ற உஸ்ண வலய நாடுகளில் அம்மை நோய் கண்டவர்களை குளிர்ச்சிப் படுத்துவதற்காக வாழை இலைகளில் படுக்க வைப்பதும் ஒரு மரபாக இருந்து வருகிறது.

வாழை நாரும் பல்வகைப் பயன்பாடு உள்ளது. எமது நாடுகளில் வாழை நாரை கயிறாகப் பயன்படுத்கிறோம். அல்லது கொடி (பட்டம்) ஏற்றும் போது அதில் பூட்டும் விண்ணுக்கு நாராகப் பயன்படுத்துகிறோம். ஆனால் யப்பானியர்கள் வாழை நாரிலிருந்து அழகான பட்டுத் துணிகளை நெய்கிறார்கள். சில நாடுகளில் வாழை நாரிலிருந்து காகிதமும் செய்கிறார்கள்.

வாழையின் வேர்களும் மருத்துவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

வாழை கூடுதலாக ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளிலேயே செய்கை பண்ணப்படுகிறது. தென் அமெரிக்காவிலுள்ள கௌத்தமாலா என்ற நாட்டுக்கு 'வாழைப்பழ நாடு' என்றொரு காரணப் பெயரும் உண்டு. குளிர் நிறைந்த மேற்கு நாடுகளில் வாழைச் செய்கை சாத்தியமில்லை. அந்த நாடுகள் தமக்குத் தேவையான வாழைப்பழத்தை இறக்குமதி மூலமே பெற்றுக் கொள்கின்றன. அதிலும் ஒருசில ரகங்களே அங்கு கிடைக்கின்றன.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஏராளமான வகை வாழை இனங்கள் செய்கை பண்ணப்படுகின்றன. இந்தியாவில் ஏலக்கி, கதலி, பேயன், அடுக்குவாழை, செவ்வாழை, மட்டி, பச்சை, மலைவாழை, கற்பூரவல்லி, ரஸ்தாளி, மொந்தன், நேத்திரம் என்பன பிரசித்தமானவை. அதேபோல, இலங்கையில் கதலி, கப்பல், இதரை, யானை, செவ்வாழை, மருத்துவவாழை, நேத்திரா, பன்றி, சீனிக்கதலி, ரப்பர் வாழை என்ற ரகங்கள் பிரபல்யமானவை. கறி சமைப்பதற்காக இலங்கையில் சாம்பல் மொந்தன், பச்சை மொந்தன் என்ற இருவகை வாழையினங்களைப் பயிரிடுவார்கள்.

ஒவ்வொரு வழையினமும் ஒவ்வொரு வகையான ருசியைக் கொடுப்பதுடன், வெவ்வேறு மருத்துவக் குணங்களையும் கொண்டிருக்கின்றன. வாழை இயற்கையின் ஒரு அதிசயமான கொடை.

**- சீனியர்**

## அரசு பற்றி லெனின்

**சுரண்டும் வர்க்கங்களுக்கு சுரண்டலை நிலைநாட்டிக் கொள்வதற்காக, அதாவது மிகப் பெருவாரியான மக்களுக்கு விரோதமாய், ஆகக் குறைவான சிறுபான்மையினரது சுயநலத்திற்காக, அரசியல் ஆட்சி தேவைப்படுகிறது. சுரண்டப்படும் வர்க்கங்களுக்கு எல்லாவித சுரண்டலையுமே அறவே ஒழிக்கும்பொருட்டு, அதாவது மிகப் பெருவாரியான மக்களது நலன்களுக்காக, நவீன கால அடிமை உடைமையாளர்களாகிய நிலப்பிரபுக்களும் முதலாளிகளுமான மிகச் சொற்ப சிறுபான்மையினருக்கு எதிராய், அரசியல் ஆட்சி தேவைப்படுகிறது.**



படிப்பகம்

www.padippakam.com

## குற்றாலம் அருவியிலே....

*தமிழகத்தில் உள்ள பிரபலமான குற்றால அருவியில் 1938ஆம் ஆண்டு வரை தாழ்த்தப்பட்ட மக்கள் குளிக்க அனுமதி இல்லை. அதனால் 1934இல் அங்கு சென்றிருந்த காந்தி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அங்கு குளிக்க அனுமதி கிடைக்கும் வரை தானும் அதில் குளிக்கமாட்டேன் எனக்கூறி அதில் குளிக்க மறுத்துவிட்டார்.*

*பின்னர் தமிழகத்தில் 1938இல் ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் மந்திரி சபை அமைந்த பின்னரே அவரது அரசாங்கம் குற்றாலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் குறிப்பதற்கு இருந்த தடையை நீக்கியது.*

## மஞ்சள் மகிமை

*எமது வாழ்வில் மஞ்சள் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது. அது மங்களகரமான ஒரு பொருள் என்ற அபிப்பிராயம் பொதுவாக நம் மத்தியில் பலருக்கு உண்டு. அதற்குப் பிரதான காரணமாக இருப்பது அதன் மருத்துவக் குணாம்சம்தான்.*

*மஞ்சள் மிகச்சிறந்த கிருமிநாசினி. அதனால்தான் அதை உடலுக்குத் தேய்த்துக் குளிப்பது, பொது இடங்களில் கரைத்துத் தெளிப்பது போன்ற காரியங்களைச் செய்கிறோம். அத்துடன் அதில் அன்ரிபயற்றிக், அன்ரிசெப்ரிக், அன்ரிபக்ரீயியல் என்ற மூன்று நோய் எதிர்ப்புப் பண்புகளும் உள்ளன. அத்துடன் நுரையீரல் தொடர்பான நோய்களையும், நோய்த் தொற்றையும் நீக்கும் ஆற்றலும் கொண்டது.*

*அநேகமான நாடுகளில் மஞ்சள் ஏதோ ஒரு வகையில் உணவில் சேர்த்துக் கொள்ளும் நிலை இன்று காணப்படுகிறது. அத்துடன் பல அழகுசாதனப் பொருட்களிலும் மஞ்சள் சேர்க்கப்படுகிறது.*




## SIM காட் என்றால் தெரியும், ஆனால்....

*இன்றைய உலகில் 'செல்போன்' என்று அழைக்கப்படும் கைத்தொலைபேசி பாவிக்காத மனிதர்களே இல்லை என்று சொல்லி விடலாம். அவ்வளவுக்கு அது ஜனரஞ்சகமாகப் போய்விட்டது.*

*இந்தக் கைத்தொலைபேசிகளின் உயிர்நாடி 'சிம்காட்' என்று அழைக்கப்படும் ஒரு பொருள். அந்த ஆங்கிலச் சொல்லின் முழு அர்த்தம் என்ன என்று தெரியாமலே பலர் அந்தச் சொல்லைச் சர்வசாதாரணமாக உபயோகித்து வருகிறார்கள். அதன் முழுமையான பெயர் இதுதான்:*

**Subscriber Information Module (SIM)**

## தர்ப்பூசணிப் பழம்

*கோடைக்காலத்தில் அதிகமாக விற்கப்படும் தர்ப்பூசணி கோடைக் கனி என்றும் கூறப்படும். தாகத்தையும் நாவறட்சியையும் தவிர்க்கும் தன்மை கொண்ட தர்ப்பூசணிப்பழம் நீர்ச்சத்து மிகுந்தது. இவைகள் சிவந்த நிறத்தில் மட்டுமல்லாமல் வெண்மையாகவும் கூட காணப்படும். நிறம் எதுவாயினும் இதை உண்ணலாம். சில இனிப்பாகயிருக்கும். சில ருசியே இல்லாமல் சப் பென்றும் இருக்கும்.*

*இதில் 90 சதவிகிதம் நீர் சத்தும் 3.37 சதவீதம் நார்ச் சத்தும் உண்டு. தவிர இரும்பு சத்து, தாது உப்புகள், சுண்ணாம்பு சத்து பாஸ்பரஸ் போன்றவைகள் சிறிய அளவில் கொண்டது. இது வைட்டமின் சி, பி. ஆகியவைகளுடன் நியாசினும் உண்டு. உடல் உஷ்ணத்தைத் தனித்து மனதை அமைதிப்படுத்தும் தன்மை உண்டு. பசியை அடக்க வல்லது இது, சிறுநீரை நன்கு பிரிய வைக்கும். அடி வயிறு சம்பந்தமான கோளாறுகளுடன் வயிற்று வலியையும் இது குணப்படுத்தும். இளமையையும் அழகையும் கூட்டக் கூடியது தர்பூசணி. இதை மிக்ஸியிலிட்டு அரைத்து சாறு எடுத்துக் குடிக்கலாம். ஊட்ட சத்து மிகுந்த பானம் இது*

## மருந்தை எறிந்துவிட வேண்டும்!

*பிரபல எழுத்தாளர் 'கல்கி' பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு போன்ற வரலாற்று நவீனங்களையும், பல சமூக சீர்திருத்த நாவல்களையும் எழுதி புகழ் பெற்ற ஒருவர். அதுமாத்திரமில்லாமல் நகைச்சுவையாக எழுதுவதிலும் பேசுவதிலும் கூட கொடிகட்டிப் பறந்தவர். உதாரணத்துக்கு இதோ ஒன்று:*

*"நமக்கு உடல்நலம் சரியில்லை என்றால் மருத்துவரிடம் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் மருத்துவர் பிழைக்க முடியும். அவர் எழுதிக் கொடுத்த சீட்டை எடுத்துக் கொண்டு மருந்துக் கடைக்குச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் கடைக்காரர் பிழைக்க முடியும். அவர் கொடுக்கும் மருந்துகளை நாம் எறிந்துவிட வேண்டும். அப்பொழுதுதான் நாம் பிழைக்க முடியும்!"*

*மனதைப் பொத்தல் குடிசையாக வைத்திராமல், எந்தப் புயலையும் தாங்கும் இரும்புக்கோட்டையாக வைத்திருக்கக் கற்க வேண்டும்*

**- மு.வரதராசன்**

www.padippakam.com

## இரும்புப் பெண் தஸ்லிமா!

தஸ்லிமா நஸ்ரின் பங்களாதேஸ் நாட்டின் பிரபல பெண் எழுத்தாளர். 1980களில் அவர் 'லஜ்ஜா' என்றொரு நாவலை எழுதி, அது முஸ்லிம்களின் மத, கலாச்சார நம்பிக்கைகளைக் கொச்சைப்படுத்துகிறது என இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கிளர்ந்து எழுந்து, அவருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என பங்களாதேஸ் அரசை வலியுறுத்தியதால், சொந்த நாட்டில் இருக்க முடியாமல் அங்கிருந்து வெளியேறி, கடந்த 25 ஆண்டுகளாக இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் அஞ்ஞாதவாசம் செய்து வருபவர்.

சமீபத்தில் அவர் ஒரு உரையின் போது, "நான் இஸ்லாமியர் இல்லை. நாத்திகர். அந்தக் கொள்கையைத்தான் நான் பின்பற்றுகிறேன். அதனால் 'முஸ்லிம் பெண்' என்று என்மீது முத்திரை விழுவதை நான் விரும்பவில்லை!" எனக் கூறியதால், மீண்டும் சர்ச்சையில் சிக்கியிருக்கிறார்.

என்ன இருந்தாலும், தஸ்லிமா ஒரு இரும்புப் பெண்தான். அவருக்கு நாமும் ஒரு சபாஸ் போடலாம்.

## அழுத பிள்ளை சிரிக்குது, கழுதைப் பாலைக் குடிக்குது!

இப்படியொரு சொல்லாடலை எமது சிறுவயதில் கேட்டிருப்போம். (கழுதைப் பாலை என்பதற்குப் பதிலாக 'கழுதை மூத்திரம் குடிக்குது' என்றும் சொல்வதுண்டு) ஆனால் அர்த்தம் தெரிந்திருக்காது. 'அழுத பிள்ளையாவது கழுதைப் பாலைக் குடிப்பதாவது' என அசூசையால் அருவருப்புப் பட்டிருப்போம். ஆனால் இந்தக் கூற்றில் ஓர் உண்மை இருக்கிறது.

கழுதைப்பாலில் மிகச் சிறந்த நோய் எதிர்ப்புச் சக்தி இருக்கிறது என்றொரு நம்பிக்கை தமிழகத்தில் ஆண்டாண்டு காலமாக நிலவி வருகிறது. அதனால் அங்குள்ள மக்களில் ஒரு பகுதியினர் பிறந்த பச்சிளம் குழந்தைக்கு தாய்ப்பாலுடன் கழுதைப் பாலையும் கொடுத்து வருகின்றனர்.

இதில் ஒரு முக்கியமான விடயம் என்னவெனில், 'கழுதைப்பால் தானே, அதற்கு என்ன பெறுமதி' என நாம் எண்ணிவிடக்கூடாது. ஒரு லிட்டர் கழுதைப்பாலின் விலை என்ன தெரியுமா? 5,000 ரூபாவிலிருந்து 6,000 ரூபா வரையாகும்.

## வேம்பின் குணநலன்கள்

○ வேப்ப எண்ணையுடன் தூய தேங்காய் எண்ணை அல்லது ஒலிவ் எண்ணையை 1:4 என்ற விகிதத்தில் கலந்து உடலில் தேய்த்தால், பூச்சிகள் மற்றும் நுளம்புக்கடியில் இருந்து தப்பிக்கலாம். மேலும், இந்த கலவை தோல் எரிச்சல், சிறு வெட்டுக்காயங்கள், தீக்காயங்கள் ஆகியவற்றையும் குணப்படுத்துகிறது.

○ வேப்ப இலைகளால் தயாரிக்கப்பட்ட தேனீரைப் பருகும்போது, தோலுக்கு பாதுகாப்பும், உறுதியும் கிடைக்கும்.

○ வேப்ப எண்ணையுடன், தேங்காய் எண்ணை அல்லது ஒலிவ் எண்ணையை கலந்து தலைக்கு தடவி, ஒரு மணி நேரம் ஊறவைத்தபின்னர் குளிக்கவும். தொடர்ந்து 3 வாரங்களுக்கு இப்படி தேய்த்துக் குளித்து வர, நீண்ட நாட்களாக இருந்து வந்த ஈறு, பொடுகு மற்றும் பேன் தொல்லைகள் நீங்கி, ஆரோக்கியமான பளபளப்பான தலைமுடியை பெறலாம்.

○ 300 மில்லி நீருடன் 2 முதல் 3 வேப்ப இலைகளை சேர்த்து, கொதிக்க வைத்து ஆறவிடவும். பின்னர் இந்த வேப்ப இலை கஷாயத்துடன், சிறிதளவு தேன் கலந்து பருகி வர, தொண்டைப் புண் குணமாகும்.

○ வேப்ப இலையை உலரவைத்து பொடியாக்கி, சிறிதளவு நீர் கலந்து பசையாக்கி முகத்தில் தடவி வர, பருக்கள் மற்றும் கொப்புளங்கள் நீங்கி முகம் பளிச்சிடும்.

○ வேப்ப எண்ணையை, காலை, மாலை இருவேளைகளிலும் 2 துளிகள் மூக்கில் இட்டு வர சைனஸ் தொல்லை விலகும்.

○ நுளம்பு உற்பத்தியாகும் இடங்களில் வேப்ப விதை மற்றும் வேப்ப எண்ணையை தெளித்து வர, நுளம்புத்தொல்லை நீங்கி சுகாதாரமாக இருக்கலாம்.

○ 250 மில்லி அளவுள்ள நீரில், 40 முதல் 50 வேப்ப இலைகளைப் போட்டு 20 நிமிடங்கள் கொதிக்க வைக்கவும். பிறகு ஆறவைத்து வடிகட்டி குடிக்க, உடலில் உள்ள தசைகள் மற்றும் திசுக்கள் பலம்பெறுகின்றன.

○ 2 அல்லது 3 வேப்பம் இலைகளை தினமும் மென்று வர, ரத்தம் சுத்திகரிக்கப்படுவதுடன், அஜீரணக்கோளாறும் சரியாகும்.

○ வலி நிவாரணியாகவும், உடல் சூட்டை தணிக்கும் சிறந்த மருந்தாகவும் இது பயன்படுகிறது.

## அஸ்பெஸ்ற் எனும் கல்நார்!

எமது நாடுகளில் கூரைகளுக்கு 'அஸ்பெஸ்ற்' (asbestos) என்ற ஒருவகை கூரைத் தகடுகளைப் பொருத்துவது வழமை. அந்தத் தகடுகளுக்கு அந்தப் பெயர் வரக் காரணம், அந்த வகைக் கூரைகள் முதன்முதலாக கிரேக்க நாட்டின் யூரல் மலைப் பகுதியில் உள்ள அஸ்பெஸ்ற் என்ற நகரத்தில் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப்பட்டதுதான். அந்த நகரின் பெயரையே அந்தக் கூரைத் தகடுகளுக்கு வைத்துவிட்டார்கள். அஸ்பெஸ்ற் என்பதை தமிழில் 'கல்நார்' என அழைக்கலாம். அஸ்பெஸ்ற் உயிராபத்தை ஏற்படுத்தும் என்பதால் உலகளவில் 52 நாடுகளில் அதன் பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளது.

www.padippakam.com

# மோடி அரசின் இந்துத்துவக் கொள்கைகளைச் சாடுகிறார் கருணாநிதி!

“பா.ஜ.க. இந்தியாவில் 2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளவாறு இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடாகவே அமைந்திட வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்படுவார்கள் என்றுதான் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது....ஆனால் அண்மைக் காலமாக மத்திய ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்களில் சிலர் மதச்சார்பின்மைக் கொள்கையைக் கைவிட்டது மட்டுமின்றி, இந்தியாவை ‘இந்து ராஸ்டிர’மாக மாற்றும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார்கள். குறிப்பாக~

○ இந்தியாவில் உள்ள அனைவரும் இந்துக்களே!

○ இராமருக்குப் பிறக்காதவர்கள் முறை தவறிப் பிறந்தவர்கள்!

○ பகவத் கீதை – தேசிய நூல்! காந்தியைப் போன்றே கோட்ஸ்சேயும் தேசபக்தர்!

○ காந்திக்குப் பதிலாக கோட்ஸ்சே நேருவைத்தான் சுட்டிருக்க வேண்டும்!

○ நாடு முழுவதும் கோட்சேக்கு சிலைகள் அமைக்க வேண்டும்!

○ கேந்திரிய வித்தியாலயா பள்ளிகளில் சமஸ்கிருதத்தைக் கற்பிக்க முயற்சி!

○ கேந்திரிய வித்தியாலயா பள்ளிகளில் சமஸ்கிருத வாரம் கொண்டாடப்படுவது!

○ தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக விடுதி மாணவர்களுக்கான சுற்றறிக்கையில் ஆங்கிலம் அகற்றப்பட்டு இந்தியை மட்டுமே பயன்படுத்துவது!

○ 2021 இல் இந்தியாவை 'இந்து ராஸ்டிர’மாக மாற்றுவது!

என பா.ஜ.க. அரசில் அங்கம் வகிக்கும் பொறுப்புள்ள அமைச்சர்கள், பா.ஜ.கவை வழிநடத்தும் ஆர்.எஸ்.எஸ்., இந்து மகாசபை தலைவர்கள் மற்றும் இவைகளின் துணை அமைப்புகள் வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்தும் – அறிக்கை வெளியிட்டும் வருகின்றனர். இத்தகைய வெளிப்படையான மதத் திணிப்பு, மொழித் திணிப்பு நடவடிக்கைகளும், மாற்று மதம் மற்றும் மொழியை, தரம் தாழ்த்தி வன்மத்தைக் கற்பிப்பதும் இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் மதச்சார்பின்மைக்கு எதிராகவும் – நாட்டின் அமைதியையும், வளர்ச்சியையும் குலைக்கும் செயலாகவும் அமைந்துவிடும்”.



இவ்வாறு ‘கல்கி’ இதழுக்கு அளித்த பேட்டியொன்றில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி, மோடி அரசின் செயற்பாடுகளைச் சாடியிருக்கிறார். கருணாநிதி சொன்னவை அனைத்தும் நூறு சதவீதம் உண்மைதான். அதுமட்டுமின்றி, கருணாநிதி சொல்லாத பல இந்துத்துவ நடவடிக்கைகளையும் மோடி அரசு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் செய்து வருகிறது.

ஆனால் கருணாநிதியின் இந்த வார்த்தைகள் உண்மையான உணர்வுடன் சொல்லப்பட்டவையா என்பதுதான் கேள்வி. ஏனெனில் மோடி மட்டுமின்றி, பா.ஜ.கவின் ஏனைய தலைவர்களான வாஜ்பாய், அத்வானி போன்றவர்களும் இந்துத்துவ வெறியர்களே. அப்படியான வாஜ்பாயின் அரசில்தானே முன்பு கருணாநிதியின் தி.மு.க. அமைச்சரவை அந்தஸ்துள்ள கட்சியாக அங்கம் வகித்தது. அப்பொழுது கருணாநிதிக்கு இன்று வந்த ஞானம் எங்கே போனது?

மோடி அரசைப் பொறுத்தவரையில் கூட கடந்த தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் போய், அதேநேரத்தில் தமிழ்நாட்டில் தி.மு.கவுக்கு சில பாராளுமன்ற ஆசனங்கள் கிடைத்திருந்தால், கருணாநிதி ஓடோடிப்போய் மோடி அரசில் இணைந்து அதைக் காப்பாற்றி இருக்கமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

உண்மை என்னவென்றால் தமிழகத்தை மாறி மாறி ஆளும் அ.தி.மு.க, தி.மு.க என்ற இரண்டு பிழைப்புவாதக் கட்சிகளையும் பொறுத்தவரையில், பணமும் பதவியும்தான் முக்கியமே தவிர, மக்கள் நலன்களோ கொள்கைகளோ முக்கியம் அல்ல.

– சஞ்சயன்

# அரசு பற்றி எங்கெல்ஸ்


அரசு என்பது, சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தின், ஒரு விளைபொருளே ஆகும். அது, சமூகம் தீர்க்க முடியாத முரண்பாட்டில் சிக்கியுள்ளது, சமூகம் தீர்க்க முடியாத பகைமைகளில் பிளவுண்டுள்ளது, மற்றும் சமூகத்திற்கு அவற்றை அகற்றும் ஆற்றல் இல்லை என்பதற்கான ஒப்புதலே ஆகும்.

ஆனால் இந்தப் பகைமைகளும் மோதுகின்ற பொருளாதார நலன்கள் கொண்டுள்ள இந்த வர்க்கங்களும், தம்மையும் சமூகத்தையும் ஒரு பயனற்ற போராட்டத்தில் மூழ்கடித்துவிடக் கூடாது என்பதற்காக, ஒரு சக்தி தேவைப்பட்டது. இந்த சக்தி சமூகத்திற்கு மேலே நிற்பதாகத் தோற்றம் தந்தது. இந்த சக்தி மோதலைத் தணித்து (ஒழுங்கீன) எல்லைகளுக்குள் மோதலை வைப்பதாக இருந்தது. இந்த சக்தி சமூகத்திலிருந்து எழுந்தது. ஆனால் சமூகத்திற்கு மேலே தன்னை வைத்துக் கொண்டது. மேலும் மேலும் சமூகத்தினிடமிருந்து தனிமைப் பட்டது. இந்த சக்தியே அரசு ஆகும்.


படிப்பகம்

www.padippakam.com

# 15 மாதங்களில் இலங்கைக் கடற்பரப்பில் 36,865 தடவைகள் இந்திய மீன்பிடிப் படகுகள் ஊடுருவல்!



இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறிய ஊடுருவல் தொடர்கதையாகத் தொடர்கின்றது. இந்தப் பிரச்சினையில் தவறு இந்தியத் தரப்பில் இருந்தும், தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக இலங்கை கடற்படை மீதும், இலங்கை (தமிழ்) மீனவர்கள் மீதுமே தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றனர். அதற்குக் காரணம், பெரும்பாலான தமிழக ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் பிரதான திராவிடக் கட்சிகளின் ஆதரவாளர்களுடையவை என்பதனாலாகும்.

இந்தப் பிரச்சினை சம்பந்தமாகக் கீழே தரப்பட்டுள்ள கட்டுரை, 2015 மே 19ஆம் திகதி கொழும்பிலிருந்து வெளியாகும் 'டெயிலி மிரர்' பத்திரிகையில் வந்த ஒரு கட்டுரையின் சாராம்சமாகும்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் தமிழ்நாடு ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளின் (Trawelers) உரிமையாளர்களின் தூதுக்குழு ஒன்று டெல்லியில் வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜை சந்தித்தது. இலங்கை அரசாங்க அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்ட தமிழ்நாடு ஆழ்கடல் மீனவர்களின் விடயத்தில் தலையீட்டு நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசைக் கோரவே அர்கள் டில்லி சென்றனர்.

இந்திய பத்திரிகைகள் தெரிவித்துள்ள தகவல்களின்படி, அவர்களைச் சந்தித்த அமைச்சர், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான சர்வதேச கடல் எல்லையை இந்திய அரசாங்கம் மதிக்கின்றது என்றும், தமிழக மீனவர்களும் அவ்வாறே மதித்து நடக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டதாகத் தெரிய வருகிறது. இலங்கைக் கடல் பகுதியில் சட்டவிரோதமாக மீன் பிடிப்பதை நிறுத்துமாறு டெல்லி கொடுத்த தெளிவான அறிவுறுத்தலுடன் தமிழக மீனவர்கள் 'வெறும் வலையுடன்' டில்லியில் இருந்து திரும்பினர்.

இதற்கு ஒருவாரம் கழித்து, தமிழ்நாடு ஆழ்கடல் மீன்பிடி படகு உரிமையாளர்களின் வழக்கறிஞர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தின் ஊடாக இந்திய கடலோரக் காவற்படைக்கு தாக்கீது ஒன்று வழங்கப்பட்டது. அதில் நீதிமன்றத்தின் முன்னைய உத்தரவுப் பிரகாரம் இந்தியக் கடலோரக் காவற்படை தமிழ்நாடு மீன்பிடிப் படகுகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டு சம்பந்தமாக நீதிமன்றத்தில் பதில் சத்தியக்கடதாசி சமர்ப்பித்த இந்தியக் கடலோரக் காவற்படையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் கே.ஆர்.நோட்டியல் (K.R.Nautial) இந்தியக் கடலோரக் காவற்படையோ அல்லது இந்தியக் கடற்படையோ, இந்திய எல்லைக்குள் இலங்கைப் படகுகள் எதனையும் வர அனுமதிப்பதில்லை என்று கூறினார். மேலும் அவர் தனது பதிலறிக்கையில், தமிழக ஆழ்கடல் மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் தடை செய்யப்பட்ட வழிமுறைகளைப் பயன்படுத்தி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதாகக் குற்றஞ்சாட்டினார். அத்துடன் அதிசக்தி வாய்ந்த மோட்டார் இயந்திரங்களைப் படகுகளில் பயன்படுத்தி இலங்கை மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களைச் சேதமாக்குவதுடன், போதைவஸ்துகள் உட்பட கள்ளக்கடத்தலில் ஈடுபடுவதாகவும், இலங்கை மீனவர்களை நடுக்கடலில் வைத்து தமிழக மீனவர்கள் தாக்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த கடலோரக் காவற்படை அதிகாரி சென்னை உயர்நீதிமன்றத்திடம் தெரிவிக்கையில், 2014ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் 2015ஆம் ஆண்டின் மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில், தமிழக ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் இலங்கையின் கடற்பரப்பில் 36,865 தடவைகள் அத்துமீறி நுழைந்து, அந்நாட்டின் சுயாதிபத்தியத்தை பாதிப்புக்கு உள்ளாக்கியதாகக் கூறினார்.

இதற்கிடையில், கடந்த வார இறுதியில் வட இலங்கை மீனவர்களின் கூட்டம் ஒன்று வவுனியாவில் நடைபெற்றது. அதில் தமிழ்நாடு ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளின் ஊடுருவலை எப்படித் தடுப்பது என்பது குறித்து ஆராயப்பட்டது. அதில் இலங்கை



படிப்பகம்

www.padippakam.com

அரசால் கைது செய்யப்பட்ட 37 தமிழக மீனவர்களை எவ்விதமான குற்றச்சாட்டுகளுமின்றி இலங்கை ஜனாதிபதி விடுதலை செய்தது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்தியப் பத்திரிகைகளின் தகவலின்படி, இலங்கையின் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் ஏற்பாட்டில் இந்தியாவின் 6 ஆழ்கடல் மீன்பிடி படகு உரிமையாளர்களுடன் – இவர்கள் எப்போதுமே இலங்கைக் கடற்பரப்பில் ஊடுருவுவதை நியாயப்படுத்துபவர்கள் – நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே இலங்கை ஜனாதிபதி இந்த முடிவை மேற்கொண்டதாகத் தெரிய வருகிறது.

வவுனியா கூட்டத்தில் மன்னார் மாவட்ட மீனவர்கள் சங்கத் தலைவர் எம்.எம்.ஆலம் (M.M.Alam) கூறுகையில், இந்திய மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் கைதுசெய்யப்பட்ட தமது 37 மீனவர்களை விடுதலை செய்யுமாறு கோருவதற்காக மட்டும் இலங்கைக்கு வரவில்லை. அவர்கள் தமது 300 படகுகள் இலங்கைக் கடல் பரப்பில் சட்டபூர்வமாக மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குமாறு எமது ஜனாதிபதியிடம் கோருவதற்குமாகவே இலங்கை வந்தனர் எனத் தெரிவித்தார். அவர்களது கோரிக்கையை இலங்கை கடற்றொழில் அமைச்சு அதிகாரிகள் கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில் வட பகுதி மீனவர்கள் பிரதிநிதிகளிடம் தெரிவித்தபோது, ஆத்திரமடைந்த மீனவ பிரதிநிதிகள் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்ததாகவும் அவர் கூறினார்.

தமிழ்நாடு ஆழ்கடல் மீன்பிடி படகு உரிமையாளர்கள் கொழும்பில் ஜனாதிபதியுடன் தேநீர் அருந்திக் கொண்டிருந்த அதேவேளையில், வடபகுதி மீனவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அவர்களது வழக்கறிஞர்கள் உயர்நீதிமன்றத்தில் அரசாங்கத்துக்கு எதிரான மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். அதில் அவர்கள், தமிழக மீனவர்கள் தவறிழைக்கவில்லை என்ற அடிப்படையில் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு இணங்க மேன்முறையீட்டு நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்த முடிவைத் தள்ளுபடி செய்யும்படி கோரியிருந்தனர். அவர்கள் தமது வாதத்தில், சட்ட மா அதிபரின் இந்த முடிவு, விசா இன்றி இலங்கைக்குள் நுழைவது சட்ட விரோதமானது என்ற விதியையும், வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள் சட்ட மூலம் சம்பந்தப்பட்ட விதியையும் மீறுவதாக அமைந்துள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழக ஆழ்கடல் மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சர்வதேசக் கடல் எல்லையை மதித்து நடக்க வேண்டும் என இந்திய அரசும், அவர்களது நீதித்துறையும் அவர்களுக்கு நிர்ப்பந்தம் கொடுத்துள்ள நிலையில், இலங்கை அரசு அதைக் கவனத்தில் கொண்டு செயற்படுவது அவசியமானது. இலங்கையின் சுயாதிபத்தியத்தை நிலைநாட்டுவதானால், வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள் சம்பந்தமான சட்டத்துக்கு அமைய, இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறும் தமிழக மீன்பிடிப் படகுகளின் உரிமையாளர்களைக் கட்டாயமாகக் கைது செய்து, தடுத்து வைத்து, தண்டனை அளிப்பது இலங்கை அதிகாரிகளின் கடமையாகும். *



# எம்.எஸ்.வி. காலமானார்!

தமிழகத்தின் திரைப்படத் துறை முக்கியஸ்தர்களான பாடகர் பி.வி.சிறினிவாஸ், நடிகர் நாகேஸ்வரராவ், பாடலாசிரியர் வாலி, இயக்குநர் கே.பாலச்சந்தர், திரைத்துறையுடன் ஓரளவு தொடர்புள்ள எழுத்தாளர் ஜெயகாந்தன் போன்றோரின் வரிசையில், 'மெல்லிசை மன்னர்' என வர்ணிக்கப்படும் எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்களும் தமது 87ஆவது வயதில் காலமாகிவிட்டார்.

1928ஆம் ஆண்டு கேரளாவில் பிறந்த அவர், 13 வயதிலேயே தனது இசை ஆர்வத்தை வெளிக்காட்டிவிட்டார். முறையான கல்வி கற்காத அவர், வறுமை காரணமாக சிறு வயதில் பல்வேறுபட்ட தொழில்களைச் செய்த போதிலும், இசைத் துறையே அவரது ஒரே அவாவாக இருந்தது. அதற்கான சந்தர்ப்பம் 1952இல் 'பணம்' என்ற படத்துக்கு இசை அமைத்ததின் மூலம் உருவானது.

அதன் பின்னர் அவர் இறக்கும் வரையான காலத்தில் தமிழ், மலையாளம், இந்தி, கன்னடம், தெலுங்கு என சுமார் 1200 படங்களுக்கு இசை அமைத்துள்ளார். பாடலாசிரியர்கள் கண்ணதாசன், வாலி ஆகியோர் எழுதிய பெரும்பாலான பாடல்களுக்கும், சௌந்தரராஜன், சுசீலா, பி.வி.சிறினிவாஸ் ஆகியோர் பாடிய பாடல்களுக்கும் விஸ்வநாதனே இசை அமைத்திருக்கிறார். ஆரம்பத்தில் ராமமூர்த்தி என்பவருடன் இணைந்தே இசை அமைத்த போதிலும், இடையே இருவருக்கும் சில முரண்பாடுகள் வந்து பிரிந்துவிட்டனர்.

தமிழ் திரையுலகின் ஆரம்ப காலங்களில் பிரபல நடிகரான எம்.டி.தியாகராஜ பகவதர் தானே பாடி நடித்து வந்தார். அவரது பாடலிலும் நடிப்பிலும் மயங்காதவர்கள் இல்லை எனலாம். ஆனால் அப்பொழுதெல்லாம் கர்நாடக இசையே கோலோச்சியது. அதை இரசிப்பதற்கு ஒரு வகைத் திறமை வேண்டும். விசுவநாதன் வந்த பின்னரே திரைப் பாடல்கள் பாமர மக்களும் இரசிக்கும் நிலையை அடைந்தது. எம்.எஸ்.விஸ்வநாதனுக்குப் பிறகு தமிழ் திரையுலகில் ஏராளமான புதியவர்கள் இசையமைப்பாளர்களாக வந்து, அவர்களில் ஏ.ஆர்.ரஹ்மான் போன்றவர்கள் சர்வதேச மதிப்பு வாய்ந்த 'ஒஸ்கார்' பரிசையும் பெற்றிருக்கிறார்கள். இருப்பினும் விஸ்வநாதனின் மறைவால் ஏற்பட்ட வெற்றிடம் நிரப்பப்படாமலே இருக்கப் போகிறது.

அன்னாரின் இறப்பால் ஏற்பட்ட துயரத்தில் 'வானவில்' பத்திரிகையும் இணைந்து கொள்கிறது. *


படிப்பகம்

www.padippakam.com

# மறைந்தோர் மகிமை:

## கனகரட்ணம் இரத்தினசபாபதி (துரை)

சாவகச்சேரி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கச்சேரியடி பாரதி வீதியை வதிவிடமாகவும் கொண்ட, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற தொலைபேசி இயக்குநர் கனகரட்ணம் இரத்தினசபாபதி அவர்கள் 10.03.2015 அன்று காலமாகிவிட்டார்.

யாழ். யாழ்பலைக்கழகம் ஆரம்பித்த காலம் முதல் சேவையில் இணைந்த அவர், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஒரு முக்கியமான உறுப்பினராக இருந்து, அதன் போராட்டங்களில் பங்கெடுத்ததுடன், மாணவர்களின் போராட்டங்களுக்கும் உறுதியான ஆதரவளித்து வந்த ஒருவராவார். குறிப்பாக, கிட்டு புலிகளின் யாழ்.மாவட்ட தளபதியாக இருந்த காலத்தில், புலிகள் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட விஜிதரன் என்ற மாணவனைக் கடத்திக் கொலை செய்த சம்பவம் உட்பட அனைத்து அராஜக நடவடிக்கைகளையும் கடுமையாக எதிர்த்த ஒருவராவார்.

## திருமதி. பேபிநாயகி நல்லதம்பி

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை திருமதி. பேபிநாயகி நல்லதம்பி அவர்கள் 20.06.2015 அன்று காலமாகிவிட்டார். அன்னார் அச்சுவேலியில் முன்பு செயல்பட்ட 'லிபேர்ட்டி சினிமா' என்ற திரையரங்கு உரிமையாளர் கே.நல்லதம்பியின் மனைவி ஆவார்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நல்லதம்பி அவர்கள், அந்தச் சமூகத்திலிருந்து வெற்றிகரமான ஒரு தொழில் முயற்சியை உருவாக்கியவர் என்ற பெருமையை உடையவர் மட்டுமின்றி, தீண்டாமை, சாதி அமைப்பு என்பனவற்றுக்கு எதிரான போராட்டங்களிலும் தம்மை விசுவாசமாக இணைத்துக் கொண்ட ஒருவர்.

1965இல் ஐ.தே.கவின் தலைமையில் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகள் பங்குபற்றிய அரசாங்கம் பதவிக்கு வந்து, வடபகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் மீது அரச ஆதரவுடன் சாதி வெறியர்கள் தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்ட பொழுது, அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக 1966இல் கூட்டப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் வெகுஜன அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் மாநாடு நல்லதம்பியின் திரையரங்கிலேயே கூட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது மனைவி பேபிநாயகி அவர்களும் கல்வி கற்பிப்பதுடன் நின்றுவிடாது, தனது கணவரின் சமூக நீதிக்கான போராட்டத்துக்கும் உறுதுணையாக நின்ற ஒருவராகும்.

## ஆசீர்வாதம் வின்சென்ற் துரைராஜா

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் வின்சென்ற் துரைராஜா (ஓய்வுபெற்ற குடியேற்றத் திட்ட அதிகாரி) அவர்கள் 05.07.2015 அன்று காலமானார்.

திரு.துரைராஜா அவர்கள் 60களின் பிற்பகுதியில் கிளிநொச்சி – திருவையாறு படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தில் பொறுப்பதிகாரியாகப் பதவி வகித்த காலத்தில், அங்கு முதலாம் படிவத்தில் குடியேறியிருந்த 102 இளைஞர்களினதும் விவசாய முயற்சிகளுக்கு பெரும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த ஒருவராவார். அத்துடன், அந்த வாலிப விவசாயிகளின் அமைப்பான புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான 'அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் திருவையாறு கிளை'க்கு அங்கீகாரம் அளித்து, அதனுடன் ஒத்திசைவாகப் பணி புரிந்த உண்மையான அரச ஊழியராகவும் திகழ்ந்தார்.

## வினாசித்தம்பி பரம்சோதி

வவுனியா – பூவரசன்குளத்தைப் பிறப்பிடமாகவும், கனடா ஸ்கபரோ நகரில் வசித்தவருமான வினாசித்தம்பி பரம்சோதி 14.07.2015 அன்று கனடாவில் காலமானார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையின் முன்னாள் தலைவரான அவர், 1964இல் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் இருந்து புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னார்வத்துடன் இணைந்து கொண்ட மாணவர்கள் குழுவில் ஒருவராவார்.

**இவர்கள் அனைவரதும் இழப்பையிட்டு 'வானவில்' அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும், இறந்தவர்களுக்குத் தனது இதயபூர்வமான அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்கிறது.**

# 1983 'கறுப்பு யூலை' நினைவாக

1983 யூலை மாதத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அன்றைய ஐ.தே.க. அரசாங்கம், ஆர்.பிரேமதாச, லலித் அத்தலத் முதலி, காமினி திசாநாயக்க, ரணில் விக்கிமசிங்க, சிறில் மத்தியு போன்ற இனவாத அமைச்சர்களின் பங்களிப்புடன் தமிழ் மக்களின் மேல் பாரிய இன வன்செயல் ஒன்றைக் கட்டவிழ்த்துவிட்டது. அதன் விளைவாக ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஐ.தே.க காடையர்களினால் கொல்லப்பட்டு, தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கப்பட்டதுடன், தமிழ் மக்களின் கோடிக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த சொத்துகளும் சூறையாடப்பட்டன. அதைத் தொடர்ந்து கொடிய இனவாத யுத்தத்தை ஐ.தே.க. இனவாத அரசு தமிழ் மக்கள் மேல் கட்டவிழ்ததுவிட்டது.

வரலாற்றில் கறையாகப் படிந்துவிட்ட அந்தக் 'கறுப்பு யூலை' சம்பவத்தை நினைவுகூரும் இவ்வேளையில், அந்தக் கொடும் செயலாலும், பின்னர் 30 வருடமாகத் தொடர்ந்த யுத்தப் பேரழிவுகளாலும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுடனும் 'வானவில்' ஒன்றிணைந்து நின்று தனது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறது


படிப்பகம்

www.padippakam.com



# ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உரை ஜனவரி 08 எதிர்ப்புரட்சியின் தொடர்ச்சியாகும்!

- அரசியல் நிருபர்

இலங்கைப் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் முடிவடைந்த பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை, ஜனவரி 08ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுடன் ஆரம்பமான எதிர்ப்புரட்சி நடவடிக்கையின் ஒரு தொடர்ச்சியாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

அவர், தான் நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் ஓகஸ்ட் மாதம் 17ம் திகதி நடைபெறப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் எந்தவொரு தரப்பையும் ஆதரிக்காமல் நடுநிலை வகிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார். அதேநேரத்தில் அவர் தலைமை தாங்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதம மந்திரி வேட்பாளராக நோக்கப்படும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீது மிகவும் கேவலமான முறையில் வசைபாடியும் இருக்கிறார்.

சிறிசேன, ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடத் தீர்மானித்த நாளிலிருந்தே மிகவும் குளறுபடியான வேலைகளைச் செய்து வருகிறார். 43 வருடங்களாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவராகவும், இறுதியில் கட்சியின் பொதுச் செயலாளராகவும், சிரேஸ்ட அமைச்சராகவும் இருந்த அவர், அக்கட்சிக்குத் திடீரெனத் துரோகம் இழைத்துவிட்டு, ஐ.தே.கவுடனும், இதர பிற்போக்கு சக்திகளுடனும் இணைந்து, வெளிநாட்டு வல்லாதிக்க சக்திகளின் உதவியுடன் ஜனாதிபதியானார்.

கட்சியை விட்டுப் போனவர் நேர்மையானவர் என்றால் அப்படியே போயிருக்க வேண்டும். ஆனால் அவர் சதி நோக்கத்துடன் திரும்பி வந்து, தனது ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி சுதந்திரக் கட்சியின் தலைமையையும், அது தலைமை தாங்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமையையும் கைப்பற்றிக் கொண்டார். அதுமாத்திரமல்ல, உண்மையிலேயே அந்த இரு அமைப்புகளினதும் சார்பாக ஜனவரி 08 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபச்சவையும் அவரது ஆதரவாளர்களையும் சதித்தனமாகவும், சர்வாதிகாரத்தனமாகவும் ஓரம்கட்டும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

ஒருவர் ஒரு தேர்தலில் தோல்வி கண்டதற்காக அக்கட்சியை விட்டுப் போய்விட வேண்டும் என்ற நெறிமுறையோ அல்லது நடைமுறையோ உலகில் எங்கும் இல்லாத போதும், மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக சிறிசேனவும், அவரை வழிநடாத்தும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவும் செயல்பட்டு வருகின்றனர். உதாரணமாக, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 20 வருடங்களில் தனது கட்சியை 20இற்கும் அதிகமான தடவைகள் தோல்விக்கு இட்டுச் சென்றும், அவர் கட்சித் தலைவராகவே இன்றும் தொடர்கிறார். அவருக்கு ஒரு நீதி, மகிந்தவுக்கு ஒரு நீதியா?

அதுமட்டுமல்ல, 1978இல் ஜே.ஆர். கொண்டு வந்த ஜனநாயக விரோத அரசியல் சட்டத்தை நீக்குவதே தான் ஜனாதிபதியானதும் முதல் பணி என்று சொன்ன சிறிசேன, தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்த ஐ.தே.கவுக்கு ஆட்சி அதிகாரத்தைக் கையளித்து, ஆட்சியிலிருந்த தனது கட்சி தலைமையிலான அரசுக்கு குழிபறிப்பும் துரோகமும் செய்தார். பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்ட போதும், அந்த எதேச்சாதிகாரம் பிடித்த சிறுபான்மை அரசையே ஆட்சியில் தொடர வைத்து அவர்கள் அரசு அதிகாரத்தைத் தேர்தலுக்குப் பயன்படுத்தவும், தேர்தல் மோசடிகளில் ஈடுபடவும் வழிவகுத்துக் கொடுத்துள்ளார்.

அவர் ஒரு கட்சியினதும், அந்தக் கட்சி தலைமையிலான ஒரு கூட்டமைப்பினதும் தலைவராக இருந்துகொண்டு, தேர்தலில் நடுநிலைமை என்று சொல்வதே கேலிக்கூத்தானது. ஆனால் அதைவிட மோசமானது, தேர்தலில் வெற்றிபெற விடாது தனது கட்சிக்கே குழிபறிக்க முயல்வது. அவர் தேர்தலில் நடுநிலைமை எதையும் வகிக்கப் போவதில்லை என்பதை அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையே புட்டு வைத்துள்ளது.

நடுநிலைமை என்று சொல்லிக் கொண்டு, தனது கட்சி சார்பாகப் போட்டியிடும் மகிந்த ராஜபக்சவுக்கு தான் வேட்பு மனு வழங்கவில்லை என்கிறார். அவரை ஜனவரி 08ஆம் திகதியில் இருந்தது போலவே தொடர்ந்து எதிர்ப்பதாகக் கூறுகிறார். அத்துடன் மகிந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைவார் என்றும் கூறுகிறார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது (தனது) சுதந்திரக் கட்சி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிவிட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியை

www.padippakam.com

முறியடிக்கவே தான் பாராளுமன்றத்தைக் கலைத்ததாகவும் கூறியிருக்கிறார்!

அவர் கூறுவது உண்மையாக இருக்கலாம். அதை மறுப்பதற்கில்லை. ஆனால் அவரிடம் முன்வைக்கும் கேள்விகள் என்னவென்றால், நீங்கள் சுதந்திரக் கட்சித் தலைவர் என்று முறையில் உங்கள் ஆதரவில்லாமல் எப்படி மகிந்தவுக்கு வேட்பு மனு கிடைத்தது? தொடர்ந்தும் நீங்கள் மகிந்தவை எதிர்ப்பதானால், உங்களைப் போல கட்சி மாறி, எதிரிகளுடன் சேராமல் கட்சியுடன் உறுதியாக நிற்கும் மகிந்தவை நீங்கள் தொடர்ந்து எதிர்ப்பதென்றால், அது சுதந்திரக் கட்சியையே நீங்கள் எதிர்ப்பது என்று அர்த்தமாகாதா? ரணிலைக் காப்பாற்றுவதற்காகத்தான் நீங்கள் பாராளுமன்றத்தைக் கலைத்தீர்கள் என்றால், நீங்கள் தேர்தலுக்குப் பின்னரும் உங்கள் கட்சிக்குத் துரோகம் இழைத்து ஐ.தே.கவை ஆட்சிக்குக் கொண்டு வரத்தான் முயல்கிறீர்கள் என்று அர்த்தப்படாதா?

ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. அதாவது சுதந்திரக் கட்சிக்குள் ஜனாதிபதி சிறிசேனவுக்கு ஆதரவு இல்லை. பெரும்பான்மையான ஆதரவு மகிந்தவுக்கே இருக்கிறது என்பது, சிறிசேனவின் எதிர்ப்பையும் மீறி அவருக்கு வேட்பு மனு வழங்கியதிலிருந்தும், மகிந்தவை தேர்தல் பிரச்சாரக் குழுவின் தலைவராக நியமித்ததிலிருந்தும் தெளிவாகின்றது. இந்த நிலைமையில் நல்லாட்சி பற்றியும், வாய்க்கு வாய் ஜனநாயகம் பற்றியும் பேசும் மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியையும், அதன் வழிவந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புத் தலைமைப் பதவியையும் துறந்துவிட்டு, ஐ.தே.கவில் சங்கமமாவதே சிறந்தது.

ஆனால் அதைச் செய்வதற்குப் பதிலாக நாட்டில் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கப் போவதாகப் புறப்பட்டவர், இப்பொழுது தனது கட்சிக்குள் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை தேர்தல் முடியும் வரை கூட்டுவதற்குத் தடை போட்டு, கட்சியின் தேர்தல் செயல்பாடுகளை முடக்கிப் போட்டிருக்கிறார்.

சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் இப்படிக் கட்சியின் செயல்பாடுகளை ஜனநாயக விரோத ரீதியில் முடக்கிப் போட்டு, தான்தோன்றித்தனமாக எந்தவொரு தலைவரும் செயல்பட்டது கிடையாது.

சிறிசேனவின் செயல்பாடுகள் ஒரே நேரத்தில் இரண்டு விடயங்களைப் புலப்படுத்துகின்றன. ஒன்று, அவர் ஜனவரி 08இல் ஆரம்பித்த வெளிநாட்டு சக்திகளின் எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்ல முயற்சிக்கிறார் என்பது. இரண்டாவது, அவர் சுதந்திரக் கட்சியின் உண்மையான தலைவர் அல்ல, அவர் ஐ.கே.கவின் பிரதிநிதி.

அவரது இந்தப் போக்கை பெரும்பான்மையான சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மட்டுமின்றி, முற்போக்கு சிந்தனையும் தேசபக்தியும் கொண்ட மக்களும் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். *

## முன்பக்கத்தொடர்ச்சி...

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க அரசுக்கு முண்டுக் கொடுக்க ஜனாதிபதி சிறிசேன செய்த ஏற்பாடும், ஐ.ம.சு.கூ. பிரதமர் ரணிலுக்கும், நிதி அமைச்சர் ரவி கருணநாயக்கவுக்கும் எதிராகக் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தால் தவிடுபொடியாக்கப்பட்டது.

இந்த நிலைமையில்தான் ஜனாதிபதி சிறிசேன பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார். அதன் நோக்கம் ஐ.தே.க. அரசை மீண்டும் பதவிக்குக் கொண்டு வருவதுதான். அதை தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் செய்யும் திகதி முடிந்த பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் வெட்ட வெளிச்சமாக ஜனாதிபதி சொல்லியும் விட்டார். ஜனாதிபதியினதும் ஐ.தே.கவினதும் அடிப்படை நோக்கம் நாட்டு மக்களுக்குச் சேவை செய்வது என்பதை விட, வெளிநாட்டு வல்லாதிக்க எஜமானர்களுக்குச் சேவை செய்வது என்று இருக்கும் போது, அவர்களிடம் இதைவிட வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது என்பதே உண்மை.

எனவே ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறப் போகும் தேர்தல் என்பது வெறுமனே எந்தக் கட்சி ஆட்சியில் அமர்வது என்பதற்கான தேர்தல் அல்ல. அது ஒருபுறம் வெளிநாட்டு சக்திகளின் கைக்கூலிகளாகச் செயல்படும் ஐ.தே.க மற்றும் ஜனாதிபதி தலைமையிலான வலதுசாரி பிற்போக்கு சக்திகளுக்கும், மறுபுறம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தலைமையிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு, முற்போக்கு, ஜனநாயக, தேசபக்த சக்திகளுக்கும் இடையிலான ஒரு போராட்டமாகும்.

எனவே மக்கள் இந்த அடிப்படையான அரசியல் உண்மையைப் புரிந்து கொண்டு, ஐ.தே.க தலைமையிலான வலதுசாரி பிற்போக்கு சக்திகளைத் தோற்கடிக்க வேண்டும்.

வலதுசாரிப் பிற்போக்கு சக்திகள் என்னும் போது, அவை வடக்கு கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இன்னொரு வடிவத்தில் இருக்கின்றன. அது ஆரம்பத்தில் தமிழ் காங்கிரஸ் கட்சியாக உருவெடுத்து, பின்னர் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, விடுதலைப் புலிகள் என உருமாற்றம் பெற்று, இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற வடிவத்தில் காட்சி அளிக்கிறது. அந்தக் கூட்டமைப்பு ஒருபக்கத்தில் சாதாரண தமிழ் மக்களிடையே சிங்கள மக்களுக்கெதிரான இனவாத விசத்தைப் பரப்பிக் கொண்டு, மறுபுறத்தில் ஐ.தே.க தலைமையிலான பெரும் முதலாளித்துவ சிங்கள இனவாத சக்திகளுடன் தொடர்ச்சியாகக் கூடிக்குலாவி வந்துள்ளது. இது அவர்களது இன, மொழி, மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட பிற்போக்கு வர்க்க ஒற்றுமையாகும்.

எனவே சிங்கள – தமிழ் மக்களிடையே உள்ள இந்த இருவகையான வலதுசாரி பிற்போக்கு சக்திகளையும், இலங்கையின் தமிழ், சிங்கள, முஸ்லிம் என, அனைத்து இனங்களையும் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து தோற்கடிக்க வேண்டியது ஒரு வரலாற்றுக் கடமையாகும். இந்த வரலாற்றுக் கடமையை, ஓகஸ்ட் 17ஆம் திகதி வழமைபோல இலங்கை மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்றுவதற்கு இப்பொழுதே சங்கற்பம் செய்ய வேண்டும். *

**முதலாளியம் என்பது ஒரு வெற்றி பெற்ற கருத்தாக்கமல்ல. அது புத்திசாலித்தனமானதுமல்ல அழகானதுமல்ல. அது நீதியானதுமல்ல. நேர்மையானதுமல்ல. அது எந்த நன்மையையும் விளைவிக்கக் கூடியதும் அல்ல. சுருக்கமாகச் சொல்வதானால் நாம் அதை விரும்பவில்லை. வெறுக்கத் தொடங்கிவிட்டோம். ஆனால் அந்த இடத்தில் எதை வைப்பது என வியக்கும்போதுதான் நாம் கடும் குழப்பத்தில் ஆழ்கிறோம்.**

**- பிரிட்டிஷ் பொருளியல் அறிஞர் ஜோன் மேனார்ட் கீன்ஸ் (John Maynard Keynes)**


படிப்பகம்

www.padippakam.com



# பலாலியில் சர்வதேச விமான நிலையம்! – ஒரு தமிழ் அமைச்சரின் கனவு!!

"**பலாலி** விமான நிலையமே இலங்கையின் பிரதான விமான நிலையம்" இப்படியொரு தலைப்பில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' நாளேடு செய்தியொன்றை (5-8-2015) வெளியிட்டிருக்கிறது. இப்படிக் கூறியிருப்பவர் தற்போதைய சிறுபான்மை ஐ.தே.க. அரசின் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்.

1976இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி தனித் தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர், தாம் அமைக்கப் போகும் தமிழீழ அரசின் சர்வதேச விமான நிலையமாக பலாலி விமான நிலையம் அமையும் என்றும், அதற்கு 'தந்தை செல்வா ஞாபகார்த்த சர்வதேச விமான நிலையம்' எனப் பெயர் சூட்டப்படும் எனவும் தமிழரசுக் கட்சியினர் முன்பு பிரச்சாரம் செய்து திரிந்தனர்.

பின்னர் புலிகள் கோலோச்சிய காலத்தில், தமது தமிழீழ அரசின் தலைநகரமாக மாங்குளம் அமையுமெனவும், அங்கு தமது நாட்டின் சர்வதேச விமான நிலையம் அமையுமெனவும் அவர்களும் பிரச்சாரம் செய்தனர்.

இப்படியாக தமிழரசுக் கட்சியும், புலிகளும் தம் மனம் போன போக்கில் தமது கற்பனைத் தமிழீழம் பற்றி பிதற்றியதில் வியப்பேதுமில்லை. ஆனால் ஐ.தே.க. என்ற ஒரு தேசியக் கட்சியில் அங்கத்தவராக இருக்கும் கொழும்புத் தமிழரான சுவாமிநாதன், என்ன அர்த்தத்தில் இப்பொழுது இப்படியொரு குண்டைப் போட்டிருக்கிறாரோ தெரியவில்லை.

ஒருவேளை முன்னைய காலத்தில் சப்புமால் என்ற சிங்கள மன்னன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அரசாட்சி செய்தது போல, சுவாமிநாதனின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆளும்போது, பலாலியில் இலங்கையின் சர்வதேச விமான நிலையத்தை அமைக்கப் போகிறாரோ என்னவோ?

# ஜே.வி.பி: 'தோழர்களுக்கு' வந்த ஆள் பஞ்சம்!

**ஜே.வி.பி.** தன்னை ஒரு சோசலிசக் கட்சி என்றும், இலங்கையில் அனைத்து இன மக்களும் சமத்துவமாக வாழ வேண்டும் எனவும் வாய் ஓயாமல் சொல்லி வரும் ஒரு கட்சி. ஆனால் அதை பெரும்பாலான மக்கள் நம்புவதில்லை. அதற்குக் காரணம், ஒரு பக்கத்தில் ஜே.வி.பி. அப்படிச் சொல்லிக் கொண்டாலும், இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிகள் எடுக்கப்பட்ட போதெல்லாம், அக்கட்சி ஐ.தே.கவுடனும் ஏனைய பேரினவாதக் கட்சிகளுடனும் இணைந்து அதைக் குழப்பியே வந்திருக்கிறது. அதன் காரணமாக, அக்கட்சியால் வடக்கு கிழக்கு தமிழ் மக்களிடமோ, முஸ்லிம் மக்களிடமோ, மலையகத் தமிழ் தமிழ் மக்களிடமோ இன்றுவரை செல்லாக்குப் பெற முடியவில்லை.

இருந்தாலும் ஜே.வி.பி. அந்த மக்களிடையே செல்வாக்குப் பெறுவதற்காக இடையிடையே முயன்று பார்க்கிறது. 1971 ஆயுதக் கிளர்ச்சி காரணமாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி. தலைவர்களை 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர். அரசு விடுதலை செய்த பின்பு, யாழ்ப்பாணத்தில் பொன்சேக என்ற ஒருவரை அமைப்பாளராக நியமித்து, அங்கு காலூன்றுவதற்கு ஜே.வி.பி. முயன்றது. ஆனால் பலனளிக்கவில்லை.

இப்பொழுது ஜனவரி 8ஆம் திகதி மைத்திபால சிறிசேன ஜனாதிபதியானதும், ஜே.வி.பி. மீண்டும் ஒருமுறை யாழ்ப்பாணத்தில் தனது முயற்சியை ஆரம்பித்துள்ளது. இப்பொழுது மலையகத்தைச் சேர்ந்த ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான இராமலிங்கம் சந்திரசேகர் என்பவரை அக்கட்சி தனது யாழ்ப்பாண அமைப்பாளராக நியமித்துள்ளது. தாம் தமிழ் மக்கள் மீது அக்கறையுள்ளவர்கள் என்று காட்டுவதற்காக முன்பு இவரை நியமன பாராளுமன்ற உறுப்பினராக நியமித்த ஜே.வி.பி., முஸ்லிம் மக்கள் மீதும் அக்கறை உள்ளதாகக் காட்டுவதற்காக அஞ்சான் உம்மா என்ற முஸ்லிம் பெண்மணியையும் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஜே.வி.பி. 'தோழர்களுக்கு' ஒன்று புரிய வேண்டும். தமிழ் – முஸ்லிம் மக்களை உங்கள் பக்கம் திருப்புவதானால், முதலில் அவர்கள் பற்றிய உங்கள் கொள்கையை சரியான வழியில் மாற்றி அமையுங்கள். இரண்டாவதாக அவர்கள் உங்கள் மீது நம்பிக்கை வைப்பதற்கு முதல், நீங்கள் அவர்கள் மீது நம்பிக்கை வைப்பதன் அடையாளமாக, அவர்களில் ஒருவரை அமைப்பாளராக நியமியுங்கள். அதை விட்டுவிட்டு, ஓட்டை வண்டியில் மாட்டுக்குப் பதிலாக கழுதையைப் பூட்டினால் வண்டி எங்ஙனம் ஓடும் ?

# நாதஸ்வர இசைக் கலைஞரின் மரணம்

**இலங்கையின்** புகழ்மிக்க நாதஸ்வர இசைக் கலைஞர் முருகப்பா பஞ்சாபிகேசன் தமது 91ஆவது வயதில் 20.06.2015 இல் கொழும்பில் காலமானார். அவரது இறுதிச் சடங்குகள் அவரது சொந்த ஊரான சாவகச்சேரி — சங்கத்தானையில் நடைபெற்ற போது, பெருந்தொகையான பொதுமக்கள், கலைஞர்கள், கல்விமான்கள், அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பஞ்சாபிகேசன் தனது 15ஆவது வயதிலேயே நாதஸ்வர கலைஞனாக மிளிரத் தொடங்கிய ஒருவர். அதன் பின்னர் புகழின் உச்சிக்கு ஏறிய அவர், இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும், சில வெளிநாடுகளிலும் தனது கச்சேரிகளை நடாத்தியிருக்கிறார். தவில் வாசிப்பில் மிகவும் புகழ் பெற்றிருந்து, தமது 42ஆவது வயதில் காலமான அளவெட்டியைச் சேர்ந்த 'தவில் மேதை' தட்சணாமூர்த்தியுடன் இணைந்து பல கச்சேரிகள் செய்து, இருவரும் மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கின்றனர். (தட்சணாமூர்த்தி பற்றி அண்மையில் ஆவணப்படம் ஒன்று வந்திருக்கிறது) அத்துடன் சுமார் 40 வருடங்களாக திருக்கேதீஸ்வரம் கோவிலின் ஆஸ்தான நாதஸ்வர வித்துவானாகவும் பஞ்சாபிகேசன் திகழ்ந்திருக்கிறார்.

பஞ்சாபிகேசன் அவர்கள் நாதஸ்வர இசைக்கு வழங்கிய பங்களிப்பை அங்கீகரித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு 2010இல் கௌரவ கலாநிதி (டாக்டர்) பட்டம் வழங்கியது.

பஞ்சாபிகேசனின் தந்தையார் முருகுப்பிள்ளை அவர்களும் புகழ்பெற்ற தவில் வித்துவானாகத் திகழ்ந்தவர். அத்துடன் பஞ்சாபிகேசனின் மூன்று மகன்களில் நாகேந்திரன், விக்னேஸ்வரன் இருவரும் இன்று பிரபல நாதஸ்வரக் கலைஞர்களாகத் திகழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.


படிப்பகம்